கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

கடலூர்

OS.102/2021 தேதி. 26.09.2022

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் நாள் வாதித் தரப்பு சாட்சி.1– ன் பிரமாண வாக்குமூலம்.

1969–ம் ஆண்டு 14 வது சட்டத்தின் படி 12 வது பிரிவின் கீழ் திரு.கே.கமலநாதன் பி.எஸ்.சி., பி.எல்., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | : ராமு |
| தந்தை பெயர் | : கோவிந்தசாமி |
| வயது | : 66 |
| தொழில் | : |
| முகவரி | : மாரியம்மன் கோவில் தெரு, ஒடலப்பட்டு,<br>டி.என்.பாளையம், கடலூர் |

நான் இந்த வழக்கில் வாதித் தரப்பு சாட்சி 1–ஆக ஏற்புறுதி ஆவணத்தில் சொல்லி உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லியவாறு சரியாக எழுதப்பட்டுள்ளது என்றும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் சத்தியமாய் சொல்லுகிறேன்.

ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

நான் இந்த வழக்கில் வாதி சாட்சி - 1 சத்தியமாய் சொல்கிறேன்.

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடந்த 3 தலைமுறைகளாக பயில் செய்து வந்த நிலத்தை சட்டவிரோதமாக பிரதிவாதிகள் 6 பேரும் எங்களை வெளியேற்ற முயற்சி செய்ததால் தாக்கல் செய்துள்ளேன். யாரிடம் குத்தகை வைத்திருந்தேன் என்றால் பார்த்தசாரதி சத்தியநாராயணன் மற்றும் தினகரன். எங்களுக்குள் குத்தகை ஒப்பந்தம் உள்ளதா என்றால் உள்ளது. குத்தகை ஒப்பந்தம் சம்மந்தமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை அது வாய்மொழி ஒப்பந்தம். நான் மேற்படி சொல்லும் பார்த்தசாரதி சத்தியநாராயணன் மற்றும் தினகரன் ஆகியோருடன் செய்த குத்தகை எடுத்ததற்கு எழுத்துபூர்வமான ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடங்கல் தவிர வேறெதாவது அடங்கல்

உள்ளதா என்றால் உள்ளது எந்த ஆண்டு பெறப்பட்டது என்றால் 2009. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1ல் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 2016. அப்போது கிராம நிர்வாக அலுவலர் யார் என்றால் ராஜசேகரன் ஆவார். இந்த அடங்கல் நான் வழக்கு தாக்கல் செய்யும்போது என்னிடம் இருந்ததா என்றால் இருந்தது. வழக்கு தாக்கல் செய்யும்போது இந்த அடங்கலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அடங்கலை கைதவறி வைத்துவிட்டேன் பிறகுதான் கிடைத்தது.

09.08.2016 ராஜசேகரன் என்பவர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இல்லை என்றால் சரியல்ல. 09.08.2016 புஷ்பராஜ் என்பவர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. 2012 லிருந்து இந்த பிரச்சனை நடக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்து 2012ல்
புகழேந்தியிடம் விற்பனை செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ராயல் என்பவருக்குதான் Power கொடுத்ததாக கேள்வி பட்டேன்.

புகழேந்தி என்பவருக்கு பவர் கொடுத்ததாக கேள்விபடவில்லை. 2012ல் வழக்கின் தாவா சொத்தின் முதல் அயிட்டத்தை புகழேந்தி என்பவருக்கு பவர் கொத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனை பின்னிட்டு புகழேந்தியிடமிருந்து 3ம் பிரதிவாதி ஞானசேகர் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தில் 3ம் பிரதிவாதி ஞானசேகர் borewell போட்டுள்ளாரா என்றால் போடவில்லை.

3ம் பிரதிவாதி ஞானசேகர் தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளாரா என்றால் சரிதான். அவர் வீடு கட்டும்போது நானும் 6ம் பிரதிவாதியும் பிரச்சனை செய்தோமா என்றால் பிரச்சனை செய்யவில்லை மறித்தோம் பின்னர் அவர் வீடு கட்டிவிட்டார். அதேபோல் இ.பி. கனெக்ஷன் கொடுப்பதற்காக இ.பி. போஸ்ட் நடும்போதும் பிரச்சனை செய்தோமா என்றால் சரிதான். பின்னர் இ.பி. போஸ்ட் நட்டு மின்சாரம் கொடுக்கப்பட்டுவிட்டதா என்றால் சரிதான்.

இந்த சொத்திற்கு மேற்கே ஏரி உள்ளதா என்றால் 4, 5 ஏக்கர் தள்ளி உள்ளது அது பொன்னேரி ஆகும். வழக்கு சொத்திற்கு தெற்கேயும் ஒரு உள்ளது என்றால் சரிதான். அந்த ஏரி பெரிய ஏரி ஆகும். வீடு கட்டியுள்ள இடத்திற்கும் வடக்கே 40 மீட்டர் அருகே கிழக்கு மேற்காக ஒரு ரோடு போகிறது என்றால் சரிதான். ரோட்டிற்கும் தாவா சொத்திற்கும் இடையில் 50 அடி பள்ளம் உள்ளதா என்றால் ரோடடில் இருந்து

2 அடிதான் உள்ளது. ஏரி கரையில் இருந்து 7 அடி உள்ளது. தாவா சொத்தினை ஒட்டி நிலம் பிளாட் போட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த lay out பெயர் என்ன என்றால் எங்கள் ஊரில் எந்த lay out ம் போடவில்லை. தாவா சொத்து சுற்றி இரண்டு ஏரிகள் உள்ளதால் தாவா சொத்தில் lay out போடுவதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் போர் போடும்போது நாங்கள் அனைவரும் வாட்டர் பிளாண்ட் போடப்படுவதாக உயர் அதிகாரிகளுக்கு புகார் அளித்தோம் அது சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த புகார் மீது பொய் புகார் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கிரையம் வாங்கிய பின்பு 3ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல.

அதேபோல் 04.09.2020ல் ரெட்டிசாவடி காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். இது சம்மந்தமாக ராயல் என்பவரையும் என்னையும் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு அமைதி குழுவிற்கு பரிந்துரை செய்து அனுப்பிவைத்தார்களா என்றால் சரிதான். தாவா சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்தற்கான அனைத்து ஆவணங்களையும் சமர்பித்தார்கள் என்றால் சரியல்ல.

எனது தரப்பில் ஊர் தலைவர் குமார் என்பவர் முன்னிலையில் அமைதி குழுவில் கலந்து கொண்டோமா என்றால் சரியல்ல. அங்கு எனது தரப்பில் பயிர் செய்வது சம்மந்தமாக வட்டாச்சியர் அலுவலகத்தில் தாக்கல் செய்தோமா என்றால் சரியல்ல. அங்கு ஒரு சமாதான உடன்பாடு ஏற்படாததால் இரு தரப்பிலும் நீதிமன்றத மூலம் பரிகாரம் பெறுமாறும் நீதிமன்ற உத்தரவு வரும்வரை தாவா சொத்தில் பிரவேசிக்க கூடாது என்று உத்தரவு பிறப்பித்தாரா என்றால் உத்தரவு பிறப்பிக்கவில்லை.

ராயல் என்பவர் என்னை தூண்டியதன்பேரில் முதலமைச்சர் தனி பிரிவிற்கு புகார் கொடுத்தோமா என்றால் சரிதான். அந்த புகாரின் மீது மேல் நடவடிக்கைக்காக கடலூர் கோட்டாச்சியரிடம் விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. வழக்கில் கோட்டாச்சியரிடம் விசாரணை நிலுவையில் உள்ளது என்று பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் கோட்டாச்சியர் விசாரணை முதலமைச்சர் தனிபிரிவு புகாருக்கு முன்பாகவே நடைபெற்றது குறித்தி எங்களுக்கு அழைப்பு வரவில்லை. கோட்டாச்சியர் என்னையும் 3ம் பிரதிவாதியையும் அழைத்து விசாரித்து அதில் எங்கள் தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் எங்களை அழைத்து எங்களை யாரும் விசாரிக்கவில்லை.

இறுதியாக 24.03.2021ல் தாவா சொத்தில் கோட்டாச்சியர் 3ம் பிரதிவாதிக்குதான் பாத்தியம் என்று உத்தரவு பிறப்பித்தாரா என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த காலத்திலும் பயிர் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.